| **Spl S.CNo.** | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **PW. 43** (LW.204 ) |
|---|---|---|---|
| Name | Tr.G.Thirumurugan | Date | 18.08.2025 |

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். எதிரிகள் சார்பில் குவிமுச 311 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு விசாரணை தொடங்கியது.**

**1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம்11.49 A.M**

நான் CDR Analysis குழுவின் உறுப்பினராக இருந்தேனா அல்லது தலைமை பொறுப்பில் இருந்தேனா என்றால் குழு எதுவும் அமைக்கப்படவில்லை, எனக்கு இந்த பணி கொடுக்கப்பட்டது. எனக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் விசாரணையில் CDR Analysis குழுவில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன், முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டிருக்கும் குழு என்பது அலுவலகத்தில் உள்ள IT Section பற்றி சொல்லியுள்ளேன். நான் BCA படித்துள்ளேன். இந்த வழக்கில் விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியாக தெரியவில்லை. IT Sectionக்கும் CDR Analysis குழுவிற்கும் என்ன வித்தியாசம் என்றால் CDR Analysis என்பது IT Sectionல் ஒரு பகுதி ஆகும். CDR Analysis அறிக்கை என்னிடம் கேட்ட போது விசாரணை அதிகாரி வழக்கின் வரலாற்றை எனக்கு இணைத்து கொடுத்தாரா என்றால் என்னிடம் வழக்கின் வரலாற்றை கொடுக்கவில்லை. இந்த வழக்கின் எதிரிகள் என்றைய

தினம் கைது செய்யப்பட்டார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு முதலில் துடியலூர் காவல் நிலையத்தாலும் பின்னர் சிபிசிஐடி போலீசாராலும் விசாரிக்கப்பட்டு அதன் பின்னர் தேசிய புலனாய்வு முகமை போலீசாரின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் சிபிசிஐடி போலீசாரால் விசாரிக்கப்பட்டு அதன் பின்னர் தேசிய புலனாய்வு முகமை போலீசாரின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விபரம் எனக்குத் தெரியும். எனக்கு விசாரணை அதிகாரியால் வழங்கப்பட்ட தரவுகள் சிபிசிஐடி போலீசார் விசாரித்த போது கிடைக்கப் பெற்ற தரவுகள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் அறிக்கை தயார் செய்த போது எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்களிடம் விளக்கம் கேட்க முற்பட்டேனா என்றால் இல்லை. எனக்கு வழங்கப்பட்ட CDR தரவுகள் எனக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதா அல்லது பிரிண்ட் அவுட் வாயிலாக தரப்பட்டதா என்றால் இரண்டும் இல்லை. இரண்டும் இல்லை என்றால் எனக்கு எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்றால் விசாரணை அதிகாரி soft copy கொடுத்தார். soft copy எந்த கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். soft copyல் உள்ள தரவுகள் upload or download செய்யப்பட்டதா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் upload செய்ய வாய்ப்பில்லை download தான் செய்திருக்க வேண்டும். CDR தரவுகளை ஆய்வு செய்த போது Excel and Pdf format ல் இருந்தது என்றால் இரண்டும் இல்லை, CSV format ல் இருந்தது.

அ.த.சா.ஆ 27, 29, 31, 130, 132, 136 மற்றும் 204 ஆகியவை விசாரணை அதிகாரியால் எனக்கு வழங்கப்பட்டதா என்றால் கைபேசி எண் கொடுக்கப்பட்டுள்ளது சரியாக உள்ளது, ஆனால் இவை தான் எனக்கு கொடுக்கப்பட்டதா என்று soft copy ஐ பார்த்தால் தான் என்னால் சொல்ல இயலும். CDR தரவுகள் புணையப்பட்டவை என்பதால் தான் நான் soft copy ஐ பார்த்தால் தான் என்னால் சொல்ல இயலும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. CSV format ல் பொதுவாக எந்த மாற்றமும் செய்ய இயலாது என்றால் மாற்றம் செய்யலாம். அ.த.சா.ஆ 27 ஆனது 15.12.2016 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு வழங்கப்பட்ட soft copyல் நேரம் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 29 ஆனது 10.12.2016 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 31 ஆனது 11.12.2016 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப் பற்றி

எனக்கு எதுவும் தெரியாது. அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 130 ஆனது 19.11.2016 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 132 ஆனது 22.12.2016 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 136 ஆனது 02.01.2017 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 204 ஆனது 15.12.2016 அன்று அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தைப்

பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த soft copy தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. ஜோடிக்கப்பட்ட தரவுகள் என்பதால் தான் நான் soft copy தற்போது என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. Switch Number என்றால் என்ன என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் முதல் முதலில் இந்த வழக்கில் தான் Call Pattern Report வழங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வேறு எந்த வழக்கிலாவது நான் Call Pattern Report வழங்கியிருக்கிறேன் என்று சொல்ல முடியுமா என்றால் வழங்கியிருக்கிறேன், என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. நான் Call Pattern Report எதுவும் வழங்காததால் தான் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்று நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தேசிய புலனாய்வு முகமை அலுவலகத்தில் நான் காவல் துறை துணை கண்காணிப்பாளர் என்ற அந்தஸ்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்படும் சசிக்குமாரின் கைபேசி எண்ணை ஆராய்ந்து அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். Call Pattern Reportல் சொல்லப்பட்டுள்ள 8 கைபேசி எண்களைத் தவிர வேறு கைபேசி எண்களைத் நான் பகுப்பாய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வேறு எந்த எண்களை நான் பகுப்பாய்விற்கு உட்படுத்தினேன் என்று உங்களால் சொல்ல முடியாது என்றால் சரியாக சொல்ல முடியாது. Call Pattern Reportல் சொல்லப்பட்டுள்ள எண்கள் ஒரே கைபேசியில் இரு சிம் கார்டுகள் உபயோகப்படுத்தப்பட்டனவா அல்லது வேறு வேறு கைபேசிகள்

பயன்படுத்தப்பட்டதா என்று என்னால் சொல்ல இயலுமா என்றால் சொல்ல இயலும், soft copy ஐ பார்த்து சொல்ல இயலும். Dual SIM போன்கள் Switch ON and Switch OFF செய்யும் போது இரு சிம்களுமே ஒரே நேரத்தில் தான் Switch ON and Switch OFF ஆகும் என்றால் சரிதான். நான் CDR பகுப்பாய்வு செய்யும் போது அதனை ஒப்பிட்டு பார்க்க விசாரணை அதிகாரி என்னிடம் ஏதேனும் கைபேசிகளை கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்டும் நாள் மற்றும் நேரத்தில் வழக்கு சம்பவம் நடந்த இடத்தின் Tower Dump விவரத்தினை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. Tower Dump விவரத்தினை தெரியாமல் தயார் செய்யப்பட்ட என்னுடைய அறிக்கை (அ.த.சா.ஆ 157 மற்றும் 158) சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, ஏனென்றால் CDR பகுப்பாய்வு செய்வதற்கு உண்டான Tower location CDR Dataவிலேயே தெரியும். Tower Dump விவரங்கள் அ.த.சா.ஆ 157 மற்றும் 158ல் உள்ள விவரங்களோடு ஒத்துப்போகாததால் தான் Tower location CDR Dataவிலேயே தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 157 மற்றும் 158 ஆகியவற்றை ஒரே விசாரணை அதிகாரியிடம் தான் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். அந்த விசாரணை அதிகாரியின் பெயர் என்னால் சொல்ல முடியுமா என்றால் திரு. L.R. குமார் ஆவார். CDR பகுப்பாய்வு எந்த software உபயோகித்து செய்தேன் என்ற விவரத்தை என்னால் சொல்ல முடியுமா என்றால் Manual ஆக செய்தேன். CDR

பகுப்பாய்வு முறையாக செய்யாததால் தான் Manual ஆக செய்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 157 மற்றும் 158 தயார் செய்யும் போது விசாரணை அதிகாரி வினாக்கள் (Questionnaire) ஏதேனும் தயார் செய்து பதில் அளிக்கும் படி கூறினாரா என்றால் கூறினார். அவ்வாறு விசாரணை அதிகாரி கேட்ட கேள்விகள் மற்றும் பதில்களை நான் அ.த.சா.ஆ157 மற்றும் 158ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ157 மற்றும் 158ல் உள்ள அறிக்கையில் Interconnecting chartல் நான் குறிப்பிட்டுள்ள கனி என்ற நபரின் செல்போன் எண்ணை பகுப்பாய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் இல்லை என்று சொல்ல முடியாது. அந்த விவரங்கள் என்னிடம் கொடுக்கப்பட்ட soft copyல் இருக்கும் என்றால் இருந்திருக்கலாம் என்னால் சரியாக சொல்ல முடியாது. அ.த.சா.ஆ157 மற்றும் 158ல் உள்ள தரவுகள் என்றைக்கு எங்கு வைத்து பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அறிக்கை சமர்ப்பித்த தேதி, இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் தேதி குறிப்பிடப்படாமல் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் இந்த அறிக்கையின் முதல் பக்கத்தில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. கையொப்பம் செய்த இடத்தில் தேதி குறிப்பிடமால் பின்னர் அறிக்கை தயார் செய்யப்பட்டதால் தான் முதல் பக்கத்தில் மட்டும் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவை எந்த கணினியில் தயார் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல, எனக்குத் தெரியும். அலுவலகத்தில் உள்ள கணினியில்

தட்டச்சு செய்தேன். அலுவலக கணினி யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் பகுப்பாய்வு செய்யும் போது என்னுடைய பொறுப்பில் தான் இருந்தது. அ.த.சா.ஆ157 மற்றும் 158ல் அறிக்கைகளில் நான் முதல் நிலை அறிக்கை (Preliminary Report) என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் இறுதி அறிக்கை (Final Report) எதுவும் விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவை தான் இறுதி அறிக்கை (Final Report). CDR தரவுகளில் IP Address தான் வரும் location address பெயர் குறிப்பிட்டு வராது என்றால் சரியல்ல, CDR தரவுகளில் IP Address உடைய விவரங்கள் எதுவும் இருக்காது location details இருக்கும். location details எண்களாக இருக்குமா எழுத்துக்களாக இருக்குமா என்றால் எண்களாகத்தான் இருக்கும். அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றில் location details எண்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ157 மற்றும் 158 எழுத்துக்களால் சொல்லப்பட்டுள்ள location detailsம் CDR தரவுகளில் குறிப்பிட்டுள்ள எண்களால் சொல்லப்பட்டுள்ள location detailsம் ஒன்று தான் என்பதற்கு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பித்த அறிக்கையில் அதை இணைக்கவில்லை. ஆனால் அந்த விபரம் Telecommunication Service Provider இடமிருந்து பெறுவது வழக்கம். இந்த வழக்கிலும் பெற்றிருக்க வேண்டும், அறுதியிட்டு சொல்ல இயலாது. ஆவணங்களை ஜோடிக்க வேண்டும் என்ற நோக்கில் Telecommunication Service Provider

இடமிருந்து அறிக்கை பெறுவது வழக்கம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை உணவு இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்ட நேரம் 1.17 P.M</u>**

**<u>1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை உணவு இடைவேளைக்குப் பிறகு தொடங்கிய நேரம் 3.14 P.M</u>**

அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றில் Call Pattern Report குறிப்பிடப்பட்டுள்ள கைபேசி எண்கள் எந்த வகையான கைபேசிகளில் பயன்படுத்தப்பட்டன என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல, CDR data வைப் பார்த்து என்னால் சொல்ல இயலும். அ.த.சா.ஆ 27, 29, 31, 130, 132, 136 மற்றும் 204 ஆகியவைகளில் உள்ள தரவுகளை வைத்து எந்த வகையான கைபேசிகளில் பயன்படுத்தப்பட்டன என்ற விபரம் என்னால் சொல்ல இயலுமா என்றால் சொல்ல இயலும், CDR Dataவில் Handset details IMEI என்று எண்களில் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும் அதை decode செய்தால் அந்த கைபேசியின் விவரம் அறிய முடியும். நான் decode செய்து அந்த கைபேசிகளின் விவரங்களை சேகரித்து அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு வழங்கப்பட்ட தரவுகளில் அ.த.சா.ஆ157 மற்றும் 158ல் குறிப்பிட்டுள்ள கைபேசி எண்களின் பயன்பாட்டாளர்களின் குரல் மாதிரி எனக்கு வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. எனக்கு தரவுகள் soft copy ஆக எவ்வாறு கொடுக்கப்பட்டது

என்றால் சரியாக சொல்ல இயலாது, ஆனால் Portable device மூலமாக கொடுத்தார். Portable device ல் External Hard Disc, Pendrive, Memory Card, Compact Disc, DVD ஆகியவை அடங்கும் என்றால் அடங்கும், எனக்கு தரவுகள் External Hard Disc or Pendrive மூலமாகத்தான் வழங்கப்பட்டது. என்னால் அறுதியிட்டு எவ்வாறு வழங்கப்பட்டது என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கின் எதிரிகளின் பெயர் மற்றும் ஏனைய விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் வழங்கிய அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றில் உள்ள interconnection chartல் 3வது எதிரி சுபேர் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றில் உள்ள interconnection chartல் மற்ற எதிரிகளான சையது அபுதாகீர், சதாம் உசேன் மற்றும் முபாரக் ஆகியோர் அருகருகே வசிக்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு CDR தரவுகளின் KYC documents பற்றி தெரியுமா என்றால் நீங்கள் சொல்லும் KYC documents என்பது எதைக் குறிக்கிறது என்று புரியவில்லை, ஆனால் CAF (Customer Application Form) பற்றி தெரியும். எனக்கு CDR தரவுகளின் KYC documents பற்றி தெரியாமலே அ.த.சா.ஆ157 மற்றும் 158 அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. soft copy ஆக கொடுக்கப்பட்ட CDR தரவுகளை எந்த softwareன் உதவியும் இன்றி திறக்க முடியாது என்றால் சரிதான். அ.த.சா.ஆ157 மற்றும் 158ல் call patternல் சொல்லப்பட்ட நபர்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூடி இருந்தார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை அதிகாரி மூலமாக சம்பவம்

நடந்த இடம் சுப்ரமணியம்பாளையம் சக்கர விநாயகர் கோவில் அருகில் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள call patternல் சொல்லப்பட்டுள்ள 8 எண்களின் locationகளில் சுப்ரமணியம்பாளையம் சக்கர விநாயகர் கோவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ157 மற்றும் 158 ஆகியவற்றிற்கான CDR தரவுகளை விசாரணை அதிகாரியிடம் இருந்து ஒரே நேரத்தில் வாங்கினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ஒரு நபர் கைபேசியை Switch Off செய்தால் அதே சமயத்தில் அவர் Incoming call attend செய்ய இயலாது என்றால் சரிதான். அ.த.சா.ஆ157ல் He received a call from Abuthagir (9092278048) at 19:54 hrs on 19.09.2016 and talked for 61 sec. The number was found switched off at 19:54 hrs on 19.09.2016 and location was near Thadagam Road, Idaiyar Palayam என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான், அந்த Call ஐ receive செய்த பிறகு உடனடியாக Switch Off செய்யப்பட்டுள்ளது. Call ஐ receive செய்த பிறகு Switch Off செய்த வரை 61 விநாடிகள் பேசியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ157ல் He switched off at 09:44:45 hrs on 23.09.2016 i.e post occurrence and location was near Sundakamuthur main road, Kuniamuthur Post and he received a call from Abuthagir (9092278048) at 09:44 hrs and talked fro 74 sec and location was near Sundakamuthur Main Road, Kuniamuthur Post area. மேலும் அ.த.சா.ஆ

158ல் on 23.09.2016 at 09:44 hrs, Abuthahir made a call to Sadham Hussain (A-2) on mobile number 7092325774 and talked for 74 seconds. The location of both Abuthagir (A-1) and Sadham (A-2) was near Selvapuram area in the morning on 23.09.2016 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவை ஒரே நிகழ்வைத் தான் குறிக்கிறது என்றால் சரிதான். அ.த.சா.ஆ 157ல் மேற்சொன்ன நிகழ்வில் சதாம் உசேனின் என்பவரின் location ஆக near Sundakamuthur Main Road, Kuniamuthur Post area என்றும் அ.த.சா.ஆ 158ல் அதே நிகழ்விற்கு சதாம் உசேனின் என்பவரின் location ஆக near Selvapuram area என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.த.சா.ஆ 157 மற்றும் 158 ஆகிய இரண்டும் நம்பத்தகுந்த தரவுகள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பொதுவாக SMT என்றால் எதனைக் குறிக்கும் என்றால் CDRல் SMT என்றால் Incoming SMS ஐ குறிக்கும். CDRன் SMSC பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும், SMSC என்றால் SMS deliver செய்வதற்கான ஒரு தொழில்நுட்பம் ஆகும். அ.த.சா.ஆ 157ல் பக்கம் 1ல் On 23.09.2016 at 09:19:20 hrs i.e after occurrence, the mobile found switched on and the location was near Shanmugarajapuram, Perur (near selvapuram) and switched off at 14:18:32 hrs and location was near K.K. Pudur என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதே switched off சமயத்தில் அ.த.சா.ஆ 130ல் CDRல் 103 விநாடிகள் கைபேசி எண் 9894276327 என்ற எண்ணுக்கு

தொடர்பு கொண்டு பேசியதாக உள்ளது என்றால் சரிதான், அந்த 103 விநாடிகள் முடிந்த உடன் switched off செய்யப்பட்டது ஏனென்றால் அதன் பிறகு CDR activity found on 24.09.2016 at 11:55:39 hrs என அ.த.சா.ஆ 130ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ 157ல் on 24.09.2016 at 11:55:39 hrs என்பது இரண்டு ஆண்டுகள் வித்தியாசத்துடன் 24.09.2018 at 11:55:39 hrs என்று உள்ளது என்றால் சரிதான், தவறாக வருடம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ 130ல் வருடம் 2016 என்று சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ 157ல் பக்கம் 2ல் 9994145110 என்ற எண்ணை குறிப்பிட்டு அதற்கான தரவுகள் 21.09.2016 முதல் 02.10.2016 வரையிலான நிகழ்வுகள் குறித்து குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ 31 தரவுகள் 01.10.2016 முதல் 30.10.2016 வரையிலான தரவுகள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ 31ல் 01.10.2016 லிருந்து மட்டுமே தரவுகள் உள்ள நிலையில் 21.09.2016, 22.09.2016, 23.09.2016 ஆகிய தேதிகளில் CDR தரவுகளில் locationகளை கொடுத்திருப்பது அ.த.சா.ஆ 157 மற்றும் 158 ஆகியவற்றின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 157ல் பக்கம் 2ல் 9994145110 என்ற எண் குறித்து உள்ள பகுதியில் again he switched on 02.10.2016 and thereafter this number was in regular use என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ 31ல் மேற்படி 9994145110 என்ற எண்ணானது 01.10.2016 அன்று 13:21:26 hrs நேரத்தில் 21 விநாடிகள் மற்றொரு எண்ணுடன் தொடர்பு கொண்டு

பேசப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ 157 மற்றும் 158 ஆகியவை என்னால் கற்பனை மற்றும் யூகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் அதில் உள்ள தகவல்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. உரிய முறையில் விசாரணை செய்து எதிரிகளை நிர்ணையிக்காமல் எதிரிகளை நிர்ணயித்துவிட்டு விசாரணையை மேற்கொண்டு வழக்கின் தன்மைக்கு ஏற்ப நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விசாரணைக் குழுவில் ஒரு அங்கமாக இருந்துவிட்டு நிபுணர் சாட்சியம் அளிப்பது சட்டத்திற்கு விரோதமானது என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 4.44 P.M</u>**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Sd/- (S.MALARVIZHI)
District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.